**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 44/2025 |
| Prosecution Witness | : | **அ.சா.**1 |
| Name | : | **ஹேமாவதி** (**செயல் அலுவலர்**) |
| Husband Name | : | **செந்தில்முருகன்** |
| Address | : | **செட்டிக்குளம்** |
| Age | : | 44/2025 |

**தேதி : 09.07.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் செட்டிக்குளத்தில் வசித்து வருகிறேன். நான் செட்டிக்குளத்தில் உள்ள ஏகாமபரேஷ்வரர் தண்டாயுதபாணி கோவிலில் செயல்அலுவலராக பணியாற்றி வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் இல்லாத எதிரிகளையும் தெரியும். கடந்த 08.09.2024ம் தேதி திருகுடமுழுக்கு களரம்பட்டி தேம்பாடி அம்மன் கோவிலில் நடந்தது. கோவிலில் குடமுழுக்கு நடைபெறுவதற்கு முன்பு குடமுழுக்கு அன்று சிறப்பு செய்வதற்காக தேவேந்திரகுல வேளாளர் சமூகத்திலிருந்து எங்களிடம் கேட்டனர். இது தொடர்பாக வட்டாட்சியர் தலைமையில் அமைதி பேச்சுவார்த்தை நடந்தது. பேச்சு வார்த்தையில் தேவேந்திரகுல வேளாளர் மற்றும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர் இடையே உடன்பாடு ஏற்பட்டு இருதரப்பினரும் கலந்துகொண்டு சிறப்பாக குடுமுழுக்கு நடைபெற்றது. தேவேந்திரகுல வேளாளர் சார்பில் எங்களுக்கும் மண்டல பூஜையில் சிறப்பு செய்ய ஒருநாள் கேட்டனர். மீண்டும் ஒருமுறை வட்டாட்சியர் தலைமையில் ஒருமுறை அமைதி பேச்சுவார்த்தை நடந்தது.

பிறகு பேச்சுவார்த்தையில்உடன்பாடு எட்டாதநிலையில் மீண்டும் சார் ஆட்சியர் தலைமையில் 27.10.2024 அன்று நடந்தபோது சார்ஆட்சியர் மண்டல பூஜை நடந்துமுடிந்துவிட்டது. ஆதலால் மீண்டும் ஒருமுறை சிறப்பு பூஜைக்கு அனுமதி அளிக்க முடியாது என்று கூறியுள்ளார். அங்கு தேவேந்திரகுல தரப்பினர் சரி என்று ஒப்புக்கொண்டு சென்றுவிட்டனர். மறுநாள் கடைசி நாள் பூஜையாக மண்டல சிறப்பு பூஜை நடந்து முடிந்துவிட்டது. பிறகு சாட்சி தாமாக முன்வந்து சார்ஆட்சியர் பேச்சு வார்த்தை நடத்தும்போது ஒவ்வொரு குடும்பமாக வந்து பூஜையில் கலந்துகொள்ளுமாறு அறிவுறுத்தினார். பிறகு மண்டல பூஜையின் கடைசி தினத்தில் மதியம் 12.00 மணி அளவில் 25 லிருந்து 30 பேர் வரை ஷேர் ஆட்டோவில் தேவேந்திரகுல வேளாளர் தரப்பினர் கோவிலுக்கு சிறப்பு செய்வதற்காக பூஜை பொருட்களுடன் வந்தனர்.

பிற்படுத்தப்பட்டோர் தரப்பினர் ஏற்கெனவே சார் ஆட்சியர் பேச்சுவார்த்தை நடத்தியபோது அவர்களை ஒவ்வொரு குடும்பமாக வந்து பூஜை நடத்துமாறு கூறியுள்ளார் என்றும், இப்போது வேண்டுமென்றே அவர்கள் அனைவரும் வந்துள்ளனர் என்றும் அவர்களை தடுத்து பிரச்சனை செய்தனர். அந்த இடத்திற்கு டி.எஸ்.பி., அறநிலைதுறை உதவி ஆணையர், ஆய்வாளர் மற்றும் அறநிலைதுறை அரசு அலுவலர்கள் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்தனர். பிரச்சனை செய்த தேவேந்திரகுல வேளாளர்குல தரப்பினர் ராஜா, தனசேகர், ரஜினிகாந்த், வினோத், காந்தருபீ, கவிதாஆகிய அனைவரும் ஒன்று சேர்ந்து அநாகரிகமாக எங்களை பேசி எங்கள் பணியை செய்யவிடாமல் தடுத்தனர். இது தொடர்பாக நான் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம்காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீஸார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் எத்தனை வருடங்களாக செயல் அலுவலர் பணியில் இருக்கிறேன் என்றால் 3 வருடங்களாக இருக்கிறேன். அந்த சம்பவம் தேம்பாடி அம்மன் கோவில் முன்பு நடந்தது என்றால் சரிதான். மேற்படி கோவில் களரம்பட்டி ஏரிக்கரையில் இருக்கிறது என்றால் சரிதான். அந்த களரம்பட்டி கோவில் இந்து அறநிலையதுறையின் கீழ் வருகிறது என்றால் சரிதான். மேற்படி கோவிலில் எந்த சாதியினரும் வழிப்பாடு செய்யலாம் என்றால் சரிதான். எதிரிகள் அனைவரும் தேவேந்திரகுல வேளாளர்சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். தேவேந்திரகுல வேளாளர் கோவிலுக்குள் நுழையக்கூடாது என்ற தடை இல்லை என்றால் சரிதான். ஏற்கெனவே அமைதி பேச்சுவார்த்தைக்கு எதிரிகள் வந்த வகையில்அவர்களை எனக்கு தெரியும்.

ராஜாவை தவிரமற்ற எதிரிகளை நான் பிரச்சனை செய்த இடத்தில்தான் பார்த்தேன் என்றால் சரிதான். எதிரிகளை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் எதிரிகளின் போட்டோக்களை எடுத்துவந்து கிராம நிர்வாக அலுவலர் காண்பித்து கேட்டார். அப்போது அவர்கள் பெயர் மற்றும் விவரம் கிராம நிர்வாக அலுவலர் எனக்கு சொன்னார். எனக்கு அன்றைய தினம் மாலையில்தான் அவர் மேற்கூறிய விவரத்தை சொன்னார். சம்பவம் நடந்து அன்றைய தினம் அல்லது அடுத்தநாள் புகார் அளித்தேனா என்றால் பெயரில்லாமல் புகார் கொடுத்தேன். ஆனால் எனக்கு அன்றைய தினம் கொடுத்தேனா அல்லது அதற்கு அடுத்த நாட்களா என்றால் ஞாபகமில்லை. இந்த சம்பவத்தில் காவல் ஆய்வாளரிடம்தான் புகார் அளித்தேன் என்றால் சரிதான்.

புகார் கொடுக்கும்போது நான் மட்டும்தான் சென்றிருந்தேனா என்றால் நானும், மற்றொரு கோவில் கணக்குபிள்ளை வந்திருந்தார். போலீஸார் என்னை புகார் கொடுத்த அன்றைய தினமே விசாரித்தார் என்றால் சரிதான். போலீஸார் விசாரணையில் சம்பவம் நடந்த நேரத்தை நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கோவில் கும்பாபிஷேகம் 08.09.2024ம் தேதி நடந்தது என்றால்

சரிதான். கும்பாபிஷேகம் நடந்த அடுத்த நாள்தான் மண்டல அபிஷேகம் நடந்தது என்றால் சரிதான். சம்பவம் நடந்த நாளன்று பெரம்பலூர் காவல்நிலைய காவல் ஆய்வாளர், வருவாய் ஆய்வாளர், இந்து அறநிலையதுறை அதிகாரிகள் சம்பவ இடத்தில் இருந்தனர் என்றால் சரிதான். எதிரிகள் சம்பவம் நடந்த அன்று தேங்காய், பூஜைபொருட்களை கொண்டுவந்தனர் என்றால் சரிதான். அவர்கள் பூஜை செய்வதற்கு பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர் எதிர்ப்பு தெரிவித்தனர் என்றால் சரிதான். தகராறு நடந்ததினால் கோவில் வளாகத்தை காவல் ஆய்வாளர் இழுத்து மூடிவிட்டார் என்றால் சரிதான். புகாரில் எந்த தேதியில் புகார் கொடுத்தேன் என்று நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

எந்த அநாகரிகமான வார்த்தைகளால் எதிரிகள் எங்களை திட்டினார்கள் என்று நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரிகள் என்னை வேலை செய்யாமல் தடுக்கும்விதமாகவோ, அநாகரிகமாக பேசியோ, கலகத்தை தூண்டும்விதமாகவோ நடந்துகொள்ளவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளின் மீது பெரம்பலூர் காவல்நிலைய ஆய்வாளர் கேட்டுக்கொண்டதன் பேரில் எதிரிகளின் மீது ஒரு பொய்யான புகாரினை கொடுத்து அதற்கு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.